**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்**

அ.வ.எண். 18/2021

பெயர் – வரதராஜ் (பி.வா.சா.2)

நாள் – 23.07.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1) நான் இன்று இந்த நீதிமன்றத்தில் ஆஜராவதை குறித்து நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. சாட்சி அளிப்பதற்கு யார் என்னை அழைத்து வந்தார் என்றால் 1ம் பிரதிவாதி அழைத்து வந்தார். 1ம் பிரதிவாதி எனது மைத்துனர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு குறித்து எனக்கு என்ன தெரியும் என்றால் வாதி சுந்தர்ராஜ் பிரதிவாதி மோகன்ராஜ் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2) இந்த வழக்கில் பிரதிவாதி மோகன்ராஜ் மட்டும் தான் என்றால் சரிதான், வேறு யாருமில்லை. எதற்காக சுந்தர்ராஜ் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் பொதுபாதை சம்மந்தமாக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கு சொத்தின் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.96/1 ஆகும். சர்வே எண்.96/1ன் புதிய சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.393/10 ஆகும். மேற்படி கூறப்பட்ட சர்வே எண்.393/10 ஆனது பிரதிவாதியின் வீடு என்றால் சரிதான்.

3) பிரதிவாதியின் வீட்டிற்கு பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் மோகன்ராஜ் பெயரில் உள்ளது. மேற்படி கூறப்பட்ட பட்டாவை நான் பார்த்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பட்டாவில் எத்தனை செண்ட் பாத்தியப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 10.5 செண்ட் ஆகும். அந்த பட்டாவின் எண் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4) நான் பார்த்ததாக சொல்லப்படும் மோகன்ராஜ் பெயரில் உள்ள பட்டாவை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொல்லப்பட்ட பட்டாவானது சர்வே எண்.393/10 பெருமாள்நாயக்கர் மகன் பெருமாள்சாமி என்பவரின் பெயரில் உள்ளது, அதன் பட்டா எண்.391 என்றால் சரிதான். பட்டா எண்.391–ன் படி மூதாதையருக்கு பாத்தியப்பட்டு பின் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால்

சரிதான். பட்டா எண்.391–ல் சொல்லப்பட்டுள்ள வீஸ்தீரணங்கள் தான் மோகன்ராஜீக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5) மேற்படி மோகன்ராஜீக்கு பாத்தியப்பட்டதை குறித்து நான் ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் கிழக்கே கனகலட்சுமி மற்றும் சுப்புராஜ் ஆகியோரின் வீடு இருந்து இடிக்கப்பட்டு இப்போது காலியிடமாக உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் வீட்டிற்கு மேற்கே ராஜூநாயக்கரின் வீடு உள்ளது என்றால் சரிதான். ராஜூநாயக்கரின் வீடு மேற்கே சர்வே எண்.393 மேல் கடைசியில் ஒரு பட்டாசு தொழிற்சாலை உள்ளது என்றால் சரிதான்.

6) பட்டாசு தொழிற்சாலை மேற்கே விவசாய நிலம் உள்ளது என்றால் சரிதான். ராஜூநாயக்கரின் வீட்டிற்கு வடக்கே ஒரு தென்வடல் தெரு உள்ளது என்றால் சரிதான், அது பொது தெரு என்றால் கிடையாது, ராஜூநாயக்கர், லட்சுமியம்மாள், மாரிமுத்து ஆகியோரின் சொந்த உபயோகத்திற்கு விடப்பட்ட தெருவாகும். மேற்படி ராஜூநாயக்கர், லட்சுமியம்மாள், மாரிமுத்து ஆகியோரின் சொந்த உபயோகத்திற்கு விடப்பட்ட தெருவை குறித்து ஆவணங்கள் எதுவும் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7) மேற்படி ராஜூநாயக்கர், லட்சுமியம்மாள், மாரிமுத்து ஆகியோரின் சொந்த உபயோகத்திற்கு விடப்பட்டவில்லை என்றும், அதன் நிமித்தம் தான் நான் எந்த ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதியின் வீட்டிற்கு இடையில் உள்ள தென்வடலாக 12 அடி உள்ள பாதை கிழமேலாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி கூறப்பட்ட பாதை குறித்து ஆவணங்கள் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் அதுகுறித்து எனக்கு எதுவும் தெரியாது.

8) ராஜூநாயக்கர் ஊருக்குள் செல்ல வேண்டும் என்றால் எந்த வழியாக செல்வார் என்றால் வாதியின் வீட்டிற்கு பின்பக்கம் வழியாக தான் செல்வார். ராஜூநாயக்கர் தெருவிற்கு செல்ல வேண்டும் என்றால் பிராதில் 'ஆ' சொத்தின் வழியாக தான் செல்வார் என்றும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. வாதி வீட்டின் தென்புற சுவரில் ஜன்னல்கள் உள்ளதா என்றால் தற்போது உள்ளது, வழக்கு சம்பவத்திற்கு முன்பாக இல்லை.

9) பிராது 'ஆ' சொத்தில் கிழமேலாக மின்சார வயர் செல்கிறது என்றால் சரியல்ல. ராஜூநாயக்கர் வீட்டின் முன்பு மின்கம்பம் உள்ளது என்றால் சரிதான். வாதி தென்புறம் வீட்டை பராமரிப்பு செய்வதற்கு 'ஆ' சொத்தை தவிர வேறு பாதையில்லை என்றால் சரிதான், இடம் விடாமல் மொத்தமாக வீடு கட்டியுள்ளார். பிரதிவாதிக்கு சர்வே எண்.95/1ல் 10.5 சென்ட் பாத்தியம் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளதை குறித்து ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பெரியவர்கள் பேசியதை நான் கேட்டதால் அவ்வாறு கூறியுள்ளேன். ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை.

10) பிரதிவாதிக்கு சர்வே எண்.95/1ல் 10.5 சென்ட் பாத்தியம் என்று நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ளதை குறித்து ஆவணம் எதுவும் பார்த்துள்ளேனா என்றால் பெரியவர்கள் பேசியதை நான் கேட்டதால் அவ்வாறு கூறியுள்ளேன் என்பது பொய் என்றும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட 10.5 சென்டில் இரண்டு வீடுகள், பாத்ரூம், போர்வெல், வாட்டர்டாங், ஆஸ்பெட்டாஸ் செட் ஆகியவை உள்ளன என பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

11) பிராது 'ஆ' சொத்து பாதையை தான் வாதி, பிரதிவாதி, ஊர் பொதுமக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிராது 'ஆ' சொத்து பாதையை பிரதிவாதி மட்டும் தான் பயன்படுத்தி வருகிறார்கள் என்று பொய்யாக வழக்கிற்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதி இடைப்பட்ட பாதையானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்பதால் தான் அரசு ஆவணங்களில் நத்தம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி கூறிய ஆ சொத்தானது பிரதிவாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்றும், பொது பாதையல்ல என்றும், கிராம மக்கள் பயன்படுத்தவில்லை என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) வாதி வீட்டின் தென்புற சுவரில் வாசல் எதுவுமில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடைய உறவினர் என்பதால் அவர் கேட்டு கொண்டதற்கு இணங்க வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.